# சட்ட உதவி ஆணைக்குழு - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சட்ட உதவி ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது 02 செயற்திட்டங்களிருந்து நன்கொடையாகக் கிடைத்த ஆணைக்குழுவின் 02 ஜீப்களின் பெறுமதி கணக்குகளில் தவிர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் சேவைக் காலத்தினை அதிகரித்துக் கணிப்பீடு செய்ததன் காரணமாக பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 76,705 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிலையான வைப்புக்களாகக் கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா 1,000,000 தொகை காசு மீதியுடன் சேர்க்கப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிலையான சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்தும் நடைமுறைச் சொத்துக்கள் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களுக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

நிலையான சொத்துக்கள் பதிவேடு இல்லாததன் காரணமாக ரூபா 16,338,580 தொகையான சொத்துக்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு | உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாடு செல்வதற்காக பிரதம மந்திரியின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிரூபம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிரூபம் | கணனி மற்றும் துணைக்கருவிகள் தொடர்பாக கணனிச் சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரதகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 2,902,700 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,423,543 ஆக இருந்தது. இதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 9,326,243 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிள் போது அரசாங்க மாணியம் ரூபா 3,113,225 ஆம் அதிகரித்திருந்த போதிலும் ஒட்டு மொத்தச் செலவு ரூபா 12,439,468 ஆல் அதிகரித்திருந்தமை இவ்வாறு பற்றாக்குறை ஏற்படுவதற்குத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ஆணைக்குழு மற்றும் அதன் பிராந்திய நிலையங்களின் மூலம் 3783 வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது தலைமை அலுவலகம் மற்றும் ஏனைய 65 நிலையங்களின் மூலம் 45,807 நபர்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிதன்மையும் சிறந்த ஏற்பாடும்

### 4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 மார்ச் 28 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 4.2 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிரூபத்தின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு